பக்கங்கள் - 21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 03 வியாழக்கிழமை 18.12.2025 | அதிர்வு 140

### வரும் ஜனாதிபதித் தேர்தலில்

## சஜித் மீண்டும் களமிறங்குவார்

### சுஜீவ எம்.பி. தகவல்



வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிடுவார் என் 04▶



# இலங்கை மீண்டெழ இந்தியா தொடர்ந்து உதவிகள் வழங்கும்

## ஜீவனிடம் சந்தோஷ் உறுதி

“இலங்கை மீண்டெழுவதற்கு இந்தியா தொடர்ந்து உதவிகளை - ஒத்துழைப்புகளை வழங்கும்.”

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர்சந்தோஷ்ஜாஉறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பிக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார். 04▶

# பேரிடர் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு

## பிரேரணை இன்று கையளிப்பு



இலங்கையில் ஏற்பட்ட பேரிடர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கக் கோரும் யோசனை இன்று சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

எதிரணிகளின் சார்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் இந்த யோசனை முன்வைக் 04▶




ஒரு மக்கள் பிரதிநிதியை - ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை - தேர்ந்தெடுக்கும் வரைத்தான் அவர் மீதான மக்களின் செல்வாக்குச் செல்லுபடியாகும். தெரிவான பின்னர் பதவிக் காலம் முழுவதும் எப்படி செயல்படுவது என்பதை அவர்தான் தீர்மானிக்கலாம். அதைப் பார்த்திருப்பதைத்தவிர, வாக்களித்தவர்களுக்கு வேறு பிடிமானம் கிடையாது. அவ்வாறு தனித்துவமாக - தம்மிஷ்டப்படி - அந்த மக்கள் பிரதிநிதி செயல்பட்டால் அவரை வெளியில் இருந்து விமர்சிப்பதையோ, குறை கூறுவதையோ தவிர மக்களுக்கு வேறு வழி இல்லை.

இன்று நான் கூறப் போகின்ற விடயமும் அத்தகைய விவகாரத்தில் ஒன்றுதான்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான சிவஞானம் சிறிதரன் நாடாளுமன்றத்தில் பிரதான கட்சிகள் அல்லாத மற்றைய எதிர்க்கட்சிகள் மத்தியில் நடைபெற்ற தேர்தலில் 05▶



# இலங்கை மீண்டெழ ஐ.நாவிடம் உதவி கோரும் எதிரணித் தலைவர்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குக்கு இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃ பிராஞ்சுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நாட்களில் வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், சர்வதேச முகவராண்மைகளின் இலங்கைப் பிரதானிகள் மற்றும் ஏராளமான அரசசாரா நிறுவனங்களின் இந்நாட்டுப் பிரதானிகள் எனப் பலரையும் சந்தித்து வருகின்றார்.

இத்தொடரின் மற்றுமொரு கட்டமாகவே இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃ பிராஞ்சை நேற்று சஜித் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில், சமகால இலங்கையின் பல்வேறு சமூக மற்றும் பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அனர்த்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள தற்போதைய பேரிடர் சூழ்நிலையால் நாட்டில் எழுந்துள்ள பன்முக பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்சிடம் எடுத்துரைத்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையால் பெற்றுத் தர முடியுமான கூடிய ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் பெற்றுத் தருமாறும், இதுவரை காலமும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இந்நாட்டுக்கு நல்கிய ஆதரவுகளுக்கும் ஒத்துழைப்புகளுக்கும் உதவிகளுக்கும் 220 இலட்சம் மக்கள் சார்பாக நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இங்கு மேலும் குறிப்பிட்டார்.









# அரசுக்கு ஆலோசனை வழங்க ரணில் தயாராம்

## ஐ.தே.க. செயலர் தலதா அறிவிப்பு

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் இடர் காலங்களில் அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகுந்த அனுபவமும், அறிவும் கொண்டவர். நாட்டைப் பாதிக்கும் அனர்த்தங்களைக் கையாள்வதில் அவர் தனது ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளார்.

ஆலோசனைகளை வழங்கத் தயாராக இருந்தாலும், அவரோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் ஏனைய உறுப்பினர்களோ தற்போதைய அரசில் எந்தவிதமான பதவிகளையும் பெற்றுக் கொள்ளும் எண்ணத்தில் இல்லை.

எங்களின் தலைவரிடம் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு, அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் அரசுக்கு உதவ ஐக்கிய தேசியக் கட்சியினராகிய நாங்களும் தயாராக இருக்கின்றோம்." – என்றார்.

# பேரிடர் முகாமைத்துவத்துக்கு தனி அமைச்சு கோரும் சஜித்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சரவை அந்தஸ்துள்ள தனியானதொரு அமைச்சு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பதற்காக சென்றிருந்தவேளை ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சி தலைவர் இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்ககூடிய வகையில் எமது நாட்டில் நேர்த்தியான பொறிமுறையொன்று எமது நாட்டில் இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.



எனவே, மீண்டுமொரு பேரிடர் ஏற்படுவதற்கு முன்னர் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவத்துக்கென தனியானதொரு நிறுவனம் – அதாவது அமைச்சொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அதேவேளை, சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்துவதற்கு எதிரணி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்." – என்றார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அநுர அரசுக்கு அமெரிக்காவின் உதவி: பின்னணியில் வேறு நிகழ்ச்சி நிரலாம்

## இப்படிக் கூறுகின்றார் விமல்



"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு அமெரிக்கா வழங்கி வரும் உதவிகளின் பின்னணியில் வேறு நிகழ்ச்சி நிரல் இருக்கக்கூடும்."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குக் கிடைக்கப் பெற்றுவரும் சர்வதேச உதவிகள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ச மேலும் கூறியதாவது:–

"அநுரகுமார திஸாநாயக்கவால்தான் இலங்கையை மீட்டெடுக்க முடியும் என அமெரிக்க இராஜதந்திரிகள் நற்சான்றிதழ் வழங்கி வரும் நிலையே தற்போது காணப்படுகின்றது.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து, 6 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. அவருக்குக் கூட இவ்வாறு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. ஆனால், இடதுசாரி ஆட்சியை முன்னெடுக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வழங்கப்படுகின்றது. இதன் பின்புலம் என்னவென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை மீண்டெழுவதற்கு பில்லியன் கணக்கில் நிதி தேவைப்படும்போது ஓரிரு மில்லியன்களை உதவியாகப் பெற்று மீள முடியுமா?

சர்வதேச உதவிகள் இலவசமாகக் கிடைக்கப் பெறுவதில்லை. அதன் பின்னணியில் வேறு நிகழ்ச்சி நிரல் இருக்கக்கூடும்." – என்றார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் பிரதான பங்காளிக் கட்சிதான் ஜே.வி.பி. என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியாகும்.

அந்தக் கட்சி ஊடாகவே விமல் வீரவன்சவின் அரசியல் பயணம் ஆரம்பமானது. எனினும், பல குற்றச்சாட்டுகள் காரணமாக அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்றத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு முன்னதாக அவர் மஹிந்த தரப்புடன் இணைந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டார். கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை.

வழமையாக அமெரிக்கா மற்றும் இந்தியாவைக் கடுமையாக விமர்சித்து வரும் அரசியல் போக்கையே அவர் பின்பற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஜிபுர் ரஹ்மான் எம்.பிக்கு மிரட்டலா? வீட்டுக்கு வரும் இனந்தெரியாத நபர்கள்

## பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பொலிஸ்மா அதிபரிடம் அவர் கோரிக்கை

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தனது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் மற்றும் கடந்த வாரம் பொலிஸார் எனக் கூறிக்கொண்டு அடையாளம் தெரியாத நபர்கள் தனது வீட்டுக்கும் உறவினர்களின் வீடுகளுக்கும் சென்றனர் என்றும், இதுகுறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு அளித்துள்ளேன் என்றும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கூறியுள்ளார்.

அரசின் குறைபாடுகளைக் கடுமையாக விமர்சிப்பதால் தமது பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது என்று முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றம் சுமத்தியுள்ளதுடன், இதுபோன்ற சூழலில், அரசுடன் தொடர்புடைய பெலவத்தை மக்கள் குழு ஒன்று தனது வீட்டுக்குத் தெரியாத நபர்களை அனுப்பித் தன்னை மிரட்ட முயற்சிக்கின்றது எனச் சந்தேகம் இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



"எனது வீடு மற்றும் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்ற அதிகாரிகள் யார் என்பது மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியாது.

கடந்த மாதத்தின் முதல் வாரத்தில் நுகேகொடையின் மிரிஹான பிரிவைச் சேர்ந்ததாகக் கூறிக்கொள்ளும் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் எனது வீட்டுக்குச் சென்றிருந்தனர். அப்போது நாடாளுமன்றத்தில் பட்ஜட் விவாதத்தில் நான் பங்கேற்றிருந்தேன்." – என்றும் முஜிபுர் ரஹ்மான் எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

### சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, சஜித் பிரேமதாஸவுக்குத் தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் இதற்கு முன்னர் இரண்டு தேர்தல்களுக்கு மட்டுமே எனது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்திருந்தேன்.

ஆனால், கடந்த இரண்டு தேர்தல்களில் சஜித் பிரேமதாஸ சில பின்னடைவுகளை எதிர்கொண்டார்.

எனவே, நீதியான முறையிலும் தற்போதைய எதிர்க்கட்சிக் களத்தை கருத்தில் கொண்டும், அவர் போட்டியிடுவதற்கு தகுதியானவர் என அங்கீகரிக்கப்பட்டுள்ளார்." – என்றார்.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு ஜீவன் தொண்டமான் எம்.பி. இதன்போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன், பேரிடரால் பெருந்தோட்டப் பகுதிகள் உட்பட மலையகத்தில் ஏற்பட்டுள்ள நிலை தொடர்பில் இந்தியத் தூதுவருக்கு ஜீவன் தொண்டமான் எம்.பி. தெளிவுபடுத்தினார்.

### பேரிடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்ப டவுள்ளது என அறியமுடிகின்றது.

டித்வா புயல் தாக்கம் உட்பட சீரற்ற காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தது என எதிரணிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தும், அனர்த்தங்களை குறைப்பதற்கு – கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற விமர்சனத்தையும் எதிரணிகள் முன்வைத்து வருகின்றன.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரேயொரு வாக்கு அதிகம் பெற்று, அதன் மூலம் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்.

இனிமேல் அரசமைப்பு கவுன்ஸிலில் அவரது செயற்பாடு அவரது தன்னிச்சையான முடிவுதான். அதை கட்டுப்படுத்தும் அதிகாரமோ அல்லது வழிப்படுத்தும் வலிமையோ அவரது கட்சிக்கோ, அவருக்கு வாக்களித்த மக்களுக்கோ, அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அவரைத் தேர்ந்தெடுத்த எதிரணி எம்.பிக்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், அதன் காரணமாக இவ் விவகாரத்தில்அவர் தம்மிஷ்டப்படி செயற்படுவதை பார்த்திருக்கவும் முடியாது.சரி பிழைகளை - எங்களுக்கு தோன்றியவற்றை - சொல்வது எங்கள் கடமை. அதை கூறுகிறேன். மக்கள் விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் விட்டுவிடலாம்.

இருக்கின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் தமிழ் தேசியத்திற்காக உயிர் கொடுப்பவர் போல பேசுபவர் சிறிதரன். சுமந்திரனும் சாணக்கியனும் சிங்கள தேசியத்தோடு கரைந்து போனவர்கள் என்ற பாணிதான் அவர் பக்கத்தில் இருப்பவர்களால் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. அது உண்மையாக தன்னும் இருந்து விட்டு போகட்டும்.

ஆனால், நவம்பர் மாதம் முழுவதும் தமிழ்த் தேசியத்திற்காக மக்கள் மத்தியில் கண்ணீர் வடிக்கும் சிறிதரன் அதற்கு முதல் மாதமும் அதற்கு அடுத்த மாதமும் அரசமைப்பு கவுன்ஸிலில் எப்படிச் செயல்படுகின்றார் என்பதுதான் மன வருத்தத்துக்குரியது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டு தொகைகளை வழங்கும் ஐவர் கொண்ட குழுவுக்கு ஏற்கனவே ஓர் இராணுவ அதிகாரி இடம் பெற்று இருக்கையில் மற்றைய இரண்டு நேரடிப் படைத் தரப்புப் பின்னணி கொண்டவர்களை நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து, பின்னர் அரசமைப்பு கவுன்ஸில் மூலம் அங்கீகாரம் அளித்த விடயத்தில் நேரடியாக சிறிதரன் சம்பந்தப்பட்டிருந்தார் என்று இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தோம். தான் அவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சிறிதரன் குறிப்பிட்டாராயினும், அது பற்றிய கூட்ட அறிக்கைப் பதிவை அவர் வெளிப்படுத்தி நிரூபிக்கவில்லை, அதுவரையில் எங்கள் குற்றச்சாட்டு உண்மையானது என்ற நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இப்போது நேற்று இன்னொரு விடயத்தில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஆளும் தரப்புடன் சேர்ந்து முழு ஆதரவு, வழங்கி சிறுமைப்பட்டிருக்கிறார் சிறிதரன் எனச் செய்தி வெளியாகியிருக்கின்றன.

இப்போது நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் பதவி சுமார் 8 - 10 மாதங்களாக வெற்றிடமாக நீடிக்கின்றது. அப்பதவிக்கு இரண்டு தடவைகள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பிரேரித்த பெயர்களை அரசமைப்புக் கவுன்ஸில் நிராகரித்துவிட்டது. சபாநாயகரை தவிர, ஒன்பது பேர் கொண்ட அரசமைப்பு கவுன்ஸிலில் எதிர்க்கட்சித் தலைவரும், அவரது கட்சியின் பிரதிநிதியும் சிவில் சமூகத்தை சேர்ந்த மூன்று பிரதிநிதிகளும் என ஐவர் ஜனாதிபதியின் பரிந்துரையை இரண்டு தடவைகளும் நிராகரித்துள்ளனர்.

மறுபக்கத்தில் பிரதமர், அவரின் ஆளுங்கட்சியின் பிரதிநிதி, ஜனாதிபதியின் பிரதிநிதி ஆகிய மூவரோடு சேர்ந்து எப்போதும் சிறிதரன் வாக்களித்து வந்திருக்கிறார். எனினும் இரண்டு தடவைகளும் ஐந்துக்கு நான்கு என்ற



கேணல் ஓ.ஆர்.ராஜசிங்க

அடிப்படையில் அந்தப் பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டன.

இந்த பின்புலத்தில்தான் புதிய ஒருவரை இப்பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரை செய்து, அது நேற்று அரசமைப்பு கவுன்ஸிலின் கூட்டத்துக்கு வந்ததாகத் தெரிகிறது. இராணுவத்தில் அதன் உள்ளகக் கணக்காய்வுக்குப் பொறுப்பான இயக்குநராக கடந்த வருடம் நியமிக்கப்பட்டு, அந்தப் பதவியில் நீடிக்கும் கேணல் ஓ.ஆர்.ராஜசிங்க என்பவரை இந்தப் பதவிக்கு மூன்றாவது தடவையாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பரிந்துரைக்க, அது நேற்று அரசமைப்பு கவுன்ஸில் கூட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்தத் தடவையும் அந்த பரிந்துரை ஐந்துக்கு நான்கு என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரும், அவரது கட்சியின் பிரதிநிதியும், மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் பரிந்துரையை எதிர்க்க, அரசு தரப்பில் மூவரோடு சேர்ந்து சிறிதரன் எம்.பி. அந்த இராணுவ அதிகாரிக்கு - கேணல் ஓ.ஆர். ராஜசிங்கவுக்கு - ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

மக்கள் மத்தியில் இராணுவத்தினருக்கு எதிராகவும், தமிழ்த் தேசியம் குறித்தும் அதிகம் பேசும் சிறிதரன், நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக இராணுவ உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் இயக்குநர் பதவியில் இருக்கும் ஒரு கேணலை நியமிக்கின்றமையை ஆதரித்து இருக்கின்றார் என்பது அதிர்ச்சியும், விசனமும், அதிருப்தியும் தரும் விடயமாக தெரிகிறது.

அரசமைப்பு கவுன்ஸிலில் சிறிதரனின் செயற்பாடு அவரின் சுய விருப்பத்துக்கு அமைவானதே தவிர, அதை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், நவம்பர் மாதம் முழுவதும் மாவீரர்களைப் போற்றும் தேசியத்தை பேசிவிட்டு, அது முடிந்த கையோடு இராணுவ உள்ளகக் கணக்காய்வு இயக்குநரை நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க எடுத்த முடிவை, அதைத் தீர்மானிக்கும் பதவியில் இருந்து கொண்டு, சிறிதரனும் சேர்ந்து முன்னெடுப்பது என்பது பெரும் விசனத்துக்குரியதுதான்.

இது தொடர்பில், அவர் பக்கத்தில் இருந்து ஏதும் நியாயப்படுத்தல் வெளிவருமானால் - தரப்படுமானால் - அதை அப்படியே - பிரசுரிக்கத் தயாராக இருக்கிறோம்.

ஆயினும் அரசமைப்பு கவுன்ஸிலில் இருக்கும் வரை அரசுப் பக்கத்தை அப்படியே ஆதரித்தே தீருவேன் என்று சிறிதரன் தொடர்ந்தும் அடம்பிடித்தால், அப்படி அவர் அடம்பிடிப்பதற்கான காரணமாகப் பல தரப்பினராலும் அவர் மீது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையானவைதானோ என்ற சந்தேகம் உறுதியாகிவிடும் என்பதை யும் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

★ ★ ★

கடந்த 29ஆம் திகதி பேரிடர் சமயத்தில் கிளிநொச்சியில் இடம்பெயர்ந்தோரைப் பராமரிக்கும் பணியில் இருந்த கிராம சேவையாளர் ஒருவரை ஆளுந் தரப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தாக்கினார் என்ற தகவல் 'முரசு' ஊடகத்தில் விவரமாக வெளியாகி இருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இந்த விவகாரத்தை ஒட்டி சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் கிளிநொச்சி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கண்துடைப்புக்குக் காட்டிக் கொண்ட கிளிநொச்சிப் பொலிஸார் சம்பந்தப்பட்ட சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்து மன்றில் நிறுத்துவதற்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் கால அவகாசம் கோரி இருக்கின்றனர். அதன்படி 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரையில் - அதாவது 10 மாதங்கள் - தங்களுக்கு கால அவகாசம் பெற்றிருக்கிறார்கள் கிளிநொச்சிப் பொலிஸார்.

இந்த விவகாரத்தை ஒட்டி சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்கள் பலர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் கவனத்திற்கு கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

அதன் அடிப்படையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை முன்வைத்து விடயத்தை மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்த சுமந்திரன், மேற்படி கிராம சேவையாளரை நாடாளுமன்ற உறுப்பினர் காலால் உதைத்துத் தாக்கிய விடயத்தை தாங்கள் தங்கள் கண்களால் கண்டனர் என்று தெரிவித்து 46 பேர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர் என்ற விவகாரத்தை மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

"சம்பந்தப்பட்டவர் நாடாளுமன்ற உறுப்பினர். அவரது நகர்வுகளும் நடவடிக்கைகளும் எல்லோருக்கும் தெரியும். அத்தகைய ஒருவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் 10 மாத காலம் கோரியிருப்பது பெரும் அபத்தம். இதில் பெரும் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன" - என்று மன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் பொலிஸாருக்குக் கொடுத்த முறைப்பாட்டில், இளங்குமரன் எம்.பி. தம்மை - தமது ஆணுறுப்பை - இலக்கு வைத்துக் காலால் எட்டி உதைத்தார் எனினும், தான் தந்திரோபாயமாக வளைந்தமையால் அந்த உதை தமது அடிவயிற்றில் விழுந்தது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய மோசமான தாக்குதல் குறித்து நடவடிக்கை எடுக்க பொலிஸார் நீதிமன்றில் 10 மாத கால அவகாசம் கோரிப் பெற்றிருப்பது மிக வேடிக்கையான விடயம்.

சுமந்திரன் சுட்டிக்காட்டிய விடயங்களை அடுத்து ஜனவரி 16ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்து மன்றில் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி கிளிநொச்சி பொலிஸின் குற்றவியல் விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரிக்கு நீதிவான் கிருஷாந்தன் உத்தரவிட்டார் எனத் தெரிய வருகிறது.

பொலிஸார் இளங்குமரன் எம்.பியைக் கைது செய்து மன்றில் நிறுத்தி, பிணை பெற்றுக் கொடுக்க வழி செய்தார்களா என்பது தெரியவில்லை. எனினும், காதும் காதும் வைத்தால் போல, அதை பொலிஸ்ஸ் தரப்பு செய்யும் என்றுதான் தோன்றுகின்றது.

இதே சமயம் கிராம சேவையாளரைத் தாக்கி விட்டு, இளங்குமரன் அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறி வாகனத்தில் தப்பிச் செல்ல முயன்ற போது அவரது வாகனம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் இன்னொரு இளைஞர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்று ஒரு தகவல் தெரிய வந்தது.

20 ஆவது

# வருடத்தில்

# Tamil one TV

*Voice of Tamil Canadians*

# ஒன்றாக முன்னோக்கி

Tamil one TVஇன் பயணத்திற்கு தொடர்ந்து
ஆதரவு வழங்கிவரும் அனைவருக்கும் நன்றி

அடுத்த தசாப்தத்திற்கான பயணத்தில் ஊடகப் பங்காளர்களாக,

கல்வி | வறுமை ஒழிப்பு | பொருளாதாரம்

அரசியல் | விளையாட்டு | கலை | கலாசாரம்

என்பவற்றில் 'ஒன்றாக முன்னோக்கி' செல்ல நாம் ஒன்றிணைவோம்.

## Vision 2030- ஒன்றாக முன்னோக்கி

tamil one TV | முரசு | வணக்கம் | V தமிழ் | Ceylon MURASU | VTV HD





# பேரனர்த்தச் சீரமைப்புப் பணிகள்: இலங்கைக்குச் சீனா முழு ஆதரவு!

## பிரதமரிடம் அந்நாட்டுக் குழு உறுதிமொழி

சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிரந்தரக் குழுவின் உப தலைவர் வாங் டோங்மிங்கிக்கும் பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் நீண்டகால இரு தரப்பு உறவுகள் மற்றும் எதிர்காலத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டிய துறைகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இலங்கை அண்மையில் எதிர்கொண்ட இயற்கை அனர்த்தத்தின் போது சீன அரசு வழங்கிய துரித உதவிகளுக்காகப் பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்ததோடு, அனர்த்தத்தின் பின்னர் இலங்கை தற்போது இயல்பு நிலைக்குத் திரும்புதல் மற்றும் மீளக்கட்டியெழுப்பும் கட்டத்துக்குள் பிரவேசித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்ட வாங் டோங்மிங், எதிர்வரும் மறுசீரமைப்புப் பணிகளுக்கும் சீனாவின் முழுமையான ஆதரவு வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

பிரதமரின் சமீபத்திய சீன விஜயத்தின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.


குறிப்பாக, பாடசாலை சீருடை, உர மானியம், டிஜிட்டல் கல்விச் செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப உதவி, வீதி அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அத்துறைகளில் நட்புறவை மேலும் பலப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.


பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்களில் இலங்கையுடன் நெருக்கமாகச் செயற்படச் சீனா தயாராக இருப்பதாகத் தெரிவித்த வாங் டோங்மிங், இந்நாட்டின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தொடர்ச்சியாகப் பங்களிப்பு செய்வதாகவும் உறுதியளித்தார்.

பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிந்துணர்வின் அடிப்படையில் இந்த உறவை மேலும் பலப்படுத்துவதற்கு இரு தரப்பினரும் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் சீனத் தூதுவர் ஷி ஷென்ஹொங், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் பிரதமர் அலுவலகத்தினதும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்று நாடாளுமன்றில்!

நாடாளுமன்றம் இன்றும் நாளையும் கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிவித்துள்ளார்.

பெரும்பாலும் நாடாளுமன்றத்தின் இந்த வருடத்துக்கான கடைசி அமர்வுத் தொடர் இதுவாகத்தான் இருக்கும்.

அதன் பின்னர் - வருட இறுதி கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடப் பிறப்பு ஆகியவற்றின் பின்னர் - பெரும்பாலும் தைப்பொங்கலுக்கு முன்னர் - புது வருடத்தில் முதல் அமர்வை நாடாளுமன்றம் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இன்றும் நாளையும் நடைபெறும் அமர்வு பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடும் போது அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஐம்பதாயிரம் கோடி ரூபா குறைநிரப்பு மதிப்பீடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அது ஆற்றுப்படுத்தப்படும் என்று தெரிகின்றது.

அதனைத் தொடர்ந்து மோசமான காலநிலையின் தாக்கத்தால் அனர்த்தம் ஏற்பட்ட பின்னர், நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் மாலை 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

அதேசமயம், வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரையான நாடாளுமன்ற அமர்வின் போது ஐம்பதாயிரம் கோடி ரூபா குறைநிரப்பு மதிப்பீடு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பேரிடர் கால முன்னெச்சரிக்கைகள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை ஒட்டி சரியான பிரதிபலிப்பு நடவடிக்கைகளை அரசாங்கமும் அதன் நிர்வாகமும் மேற்கொள்ளவில்லை என்று தொடர்ந்து குறை கூறி வரும் எதிர்க்கட்சிகள், இன்று நாடாளுமன்ற மேடையை அவ்விவகாரத்தை ஒட்டி ரணகளமாக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

பேரிடர் நெருக்கடிகளை ஒட்டி அரசுப் பக்கத்தில் இடம்பெற்ற தவறுகள் என்று எதிர்க்கட்சிகள் ஆங்காங்கே கூறிவந்த விடயங்கள் இன்று நாடாளுமன்றத்தில் எதிரொலிக்கும்.

பேரிடரை ஒட்டி இத்தகைய மேடை ஒன்றுக்கான வாய்ப்புக்காகக் காத்திருக்கும் எதிர்க்கட்சியினருக்கு சரியான - பொருத்தமான - சமயத்தில் இன்றைய வாய்ப்புக் கிட்டுகிறது. அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளும் ஆரவாரங்களும் இன்று நாடாளுமன்றத்தில் வலு சூடாக ஒலிக்கும் என எதிர்பார்க்க முடியும்.

# மண்சரிவு அபாயத்தில் ‘ஒன்பது வளைவு’ பாலம்

“டித்வா“ சூறாவளி தாக்கத்தால் ஏற்பட்ட அதிதீவிர வானிலை காரணமாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த தெமோதர“ஒன்பது வளைவு“ பாலம் அமைந்துள்ள பகுதி மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதியில் புதிய சுற்றுலா வலையமைப்பொன்றை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக அங்கு நிர்மாணிக்கப்பட்டு வந்த சில கட்டிடங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் குரே தெரிவித்துள்ளார்.

ஒன்பது வளைவுப் பாலத்தை மின் ஒளியூட்டல் மற்றும் புதிய சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், சுமார் 300 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட இந்த திட்டம், இவ்வருட இறுதிக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் கட்டிடச் சேதங்கள் காரணமாக, நிர்மாணப் பணிகளைத் திட்டமிட்டபடி நிறைவு செய்வதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன், இந்தத் திட்டத்தை எக்காரணம் கொண்டும் கைவிடும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என பணிப்பாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பாதிப்புகளைச் சீர்செய்து, பணிகளை விரைவுபடுத்தி அடுத்த ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக இதனைத் திறந்து வைக்க எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# உச்சத்தை தொட்ட மரக்கறிகள் விலை

மரக்கறிகளின் விலைப்பட்டியலுக்கு அமைய, கறிமிளகாயின் விலையில் தொடர்ந்தும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் கறிமிளகாய், நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் 1,050 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட அதேவேளை, தம்புத்தேகமவில் 980 முதல் 1,000 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் தக்காளி, தம்புத்தேகமவில் 400 ரூபா முதல் 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நுவரெலியாவில் பச்சை வீட்டுத் தக்காளி 600 ரூபா முதல் 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

கரட் ஒருகிலோகிராம்தம்புத்தேகமவில் 170 ரூபா முதல் 260 ரூபாய் வரையிலும், நுவரெலியாவில் 200 ரூபா முதல் 230 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

இதேவேளை லீக்ஸ் ஒரு கிலோகிராம் தம்புத்தேகமவில் 260 ரூபா முதல் 270 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், நுவரெலியாவில், 200 ரூபா முதல் 230 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன், தம்புத்தேகமவில் ஒரு கிலோகிராம் கத்தரிக்காய் 550 ரூபாவுக்கும், பாகற்காய் 600 ரூபா முதல் 750 ரூபா வரையிலும் போஞ்சி ஒரு கிலோகிராம் 450 ரூபா முதல் 600 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# யானையை எரித்த விசமிகள் தொடர்பில் வனஜீவராசி திணைக்களம் விசாரணை

காட்டு யானை ஒன்று எரியூட்டப்படும் காட்சிகள் அடங்கிய காணொளி தொடர்பில் அநுராதபுர வலய வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



மிகிந்தலை, சீப்புகுளம், அம்பகஹவெல பகுதியில் வைத்து இந்த காட்டு யானை எரியூட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில், சம்பவம் தொடர்பான அறிக்கை, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானையை எரித்த நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும் சந்தேகநபரைக் கைது செய்வதற்காக, அநுராதபுர வலய வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி உள்ளிட்ட குழுவினர், இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவகின்றனர் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சம்பவத்தில், எரியூட்டப்பட்டு கொல்லப்பட்ட குறித்த யானை சுமார் 50 முதல் 55 வயதுடைய ஆண் யானை எனவும், 9 அடி உயரமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யானை, ஏற்கனவே இடது முன்னங்காலில் துப்பாக்கிச் சூட்டு காயத்துக்கு உள்ளாகியிருந்ததாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காகப் பன்டுலகம கால்நடை மருத்துவ அதிகாரிகளால் கடந்த மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சிகிச்சையளிக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# மியன்மாரிலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பினர்

மியன்மாரின் மியாவாடி பகுதியில் உள்ள இணையக் குற்றச் முகாம்களில் மனிதக் கடத்தலுக்கு உள்ளாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த 25 இலங்கை பிரஜைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு, இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டலில், பாங்கொக்கிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் மியன்மாரிலுள்ள இலங்கைத் தூதரகம் ஆகியன இணைந்து இந்த மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன.

தாய்லாந்து அதிகாரிகளின் நேரடி ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவர் விஜயந்தி எதிரிசிங்க மற்றும் தூதரக அதிகாரிகள், தாய்லாந்தின் வெளி விவகார அமைச்சு, சமூக மேம்பாட்டு அமைச்சு, தேசிய பாதுகாப்புச் சபை மற்றும் குடிவரவு அதிகாரிகளுடன் இணைந்து இதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் தீவிரமாகச் செயற்பட்டனர்.

மீட்கப்பட்டவர்கள் தாய்லாந்து எல்லை வழியாக பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்களுக்கு இலங்கைத் தூதரகம் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்பு மற்றும் தாய்லாந்தின் மே சோட் பகுதியில் உள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய விமானப் பயண வசதிகள் மற்றும் ஏனைய தளபாட ரீதியான உதவிகளையும் தூதரகம் பாராட்டியுள்ளது.

வேலைவாய்ப்பு என நம்பி சுற்றுலா விசா மூலம் மியன்மார் போன்ற நாடுகளுக்குச் சென்று, இவ்வாறான சட்டவிரோதக் கும்பல்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டாம் என இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாகப் பொதுமக்களை எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தை பெறுவதற்கான காலக்கெடு நீடிப்பு

'டித்வா' சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், அவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் காலக்கெடுவை டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விவசாய ஓய்வூதியதாரர்கள் டிசம்பர் மாதம் முழுவதும் வேலை நாட்களில் தமக்குரிய தபால் அல்லது உப தபால் நிலையங்களில் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.



பொதுவாக ஒவ்வொரு மாதமும் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

அண்மைய பேரிடர் காரணமாக வீதிகள் சேதமடைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள போக்குவரத்து சிரமங்களைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது 178,753 விவசாயிகள் மற்றும் 6,312 கடற்றொழிலாளர்கள் இந்த ஓய்வூதியப் பயன்களைப் பெறுகின்றனர். டிசம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக அரசாங்கம் 413 மில்லியன் ரூபாயைச் செலவிடவுள்ளதாக விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

# மத்திய மாகாண பாடசாலைகளுக்கு மண்சரிவு அபாயம் எதுவும் இல்லை

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் உறுதி

மத்திய மாகாணத்தில் உள்ள எந்தவொரு பாடசாலைக்கும் மண்சரிவு அபாயம் இல்லை என்பது தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட மதிப்பீட்டு ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

"டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட மண்சரிவு தாக்கங்கள் காரணமாக மத்திய மாகாணத்தில் உள்ள எந்தவொரு பாடசாலையையும் அங்கிருந்து அகற்றும் அல்லது இடமாற்றும் அவசியம் இல்லை என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் கலாநிதி ஆசிறி கருணாவர்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கட்டடங்கள் பாதுகாப்பாக உள்ள போதிலும், அந்தப் பாடசாலைகளுக்குச் செல்லும் வீதிகள் பல இடங்களில் குழி விழுந்தும் பலத்த சேதமடைந்தும் காணப்படுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனவே, மாணவர்களின் போக்குவரத்துப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அந்த வீதிகளை உடனடியாகப் புனரமைக்குமாறு அரசாங்கத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட மதிப்பீட்டு ஆய்விற்காக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின்



நிபுணர்களுடன் இணைந்து பேராதனை, மொரட்டுவை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகிய மூன்று முன்னணி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 15 நிபுணர் குழுக்கள் பங்கேற்றன.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், கடந்த டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இந்த கள ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பாடசாலைகளை அந்த இடங்களிலேயே தொடர்ந்து நடத்துவது பொருத்தமானது என கல்வி அமைச்சுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நிலவிய சீரற்ற வானிலையினால் கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளே இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

# முதியோர் உதவித்தொகை கொடுப்பனவு இன்று பயனாளிகள் வங்கி கணக்குகளில்

அஸ்வெசும நலத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள குடும்பங்களின் முதியோர் உதவித்தொகை கொடுப்பனவு இன்று பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரிச் சபை இதனை அறிவித்துள்ளது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிக் குடும்பங்களில் வசிக்கும் 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான டிசம்பர் மாதக் கொடுப்பனவு வங்கிகளில் வைப்பு

நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD

செய்யப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

டிசம்பர் மாதத்திற்கான முதியோர் கொடுப்பனவு ஏற்கனவே வங்கிக் கணக்குகளில்வரவுவைக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள பயனாளிகள் இன்று முதல் தங்களது அஸ்வெசும வங்கிக் கணக்குகள் ஊடாக இந்தக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் 616,346 முதியவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த முதியோர் நலன்புரித் திட்டத்திற்காக அரசாங்கம் 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளது





# கிரவல் அகழ்வை எதிர்த்த எழுவர் கைது சத்தியலிங்கம் எம்.பி. கடும் ஆட்சேபம்

## கங்கன்குளம் கிரவல்குவாரி குறித்து ஆளுநருக்குக் கடிதம்

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கங்கன்குளம் கிராமத்தில் கிரவல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்களை பொலிஸார் கைதுசெய்தமை தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண ஆளுனர் நா.வேதநாயகனுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதன் பிரதி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கங்கன்குளம் கிராமத்தில் அங்கு வாழும் மக்களின் எதிர்ப்பையும் மீறி கிரவல் அகழ்வு நடைபெற்றது. இவ்விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர்ய்க்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. அவரும் இச்செயற்பாட்டை நிறுத்துமாறு அறிவுறுத்தியிருந்தார். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு அகழ்வை நிறுத்துமாறு கோரப்பட்டது. ஆனால் பிரதேச செயலாளர் தன்னிச்சையாக அனுமதிக்கான ஒப்புதலை கனிய வள திணைக்களத்திற்கு வழங்கியமையால் அவர்கள் அகழ்விற்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

பிரதேசசபை தமது வீதியை கிரவல் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த சில தினங்களிற்கு முன்னர் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று கூறி கடந்த திங்களன்று கிராம மக்கள் 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனஜ் கிராம மக்கள் எனக்கு அறிவித்துள்ளனர். வவுனியா மாவட்ட செயலாளருடன் பேசியபோது அவரும் மேற்படி விடயங்களை உறுதிப்படுத்தினார்.

உடனடியாக எதிர்ப்புப்போராட்டம் நடத்த கிராமவாசிகள் அணி திரள்கிறார்கள். இதனால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே தாங்கள் இவ்விடயத்தில் தலையீடு செய்து பிரச்சனையை தீர்க்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். – என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

மருத்துவர் ப. சத்தியலிங்கம் MD - பாராளுமன்ற உறுப்பினர்
Dr.P.Sathiyalingam MD - Member of Parliament

My No : MP/2025/Governor-NP

Date : 15.12.2025

கௌரவ ஆளுநர் அவர்கள்,
ஆளுநர் செயலகம்,
வடக்கு மாகாணம்.

கிரவல் அகழ்வு தொடர்பிலானது

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கங்கன்குளம் கிராமத்தில் அங்குவாழும் மக்களின் எதிர்ப்பையும் மீறி கிரவல் அகழ்வு நடைபெற்றது. இவ்விடயம் தொடர்பாக மாவட்ட செயலாளர் அவர்களுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. அவரும் இச்செயற்பாட்டை நிறுத்துமாறு அறிவுறுத்தியிருந்தார். பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் ஆராயப்பட்டு அகழ்வை நிறுத்துமாறு கோரப்பட்டது.

ஆனால் பிரதேச செயலாளர் தன்னிச்சையாக அனுமதிக்கான ஒப்புதலை கனியவள திணைக்களத்திற்கு (GSMP) வழங்கியதால் அவர்கள் அகழ்விற்கான அனுமதியை வழங்கியுள்ளனர். பிரதேசசபை தமது வீதியை கிரவல் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் கடந்த சில தினங்களிற்கு முன்னர் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று கூறி இன்று கிராம மக்கள் 7 பேர் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளதாக கிராம மக்கள் எனக்கு அறிவித்துள்ளனர். வவுனியா மாவட்ட செயலாளருடன் பேசியபோது அவரும் மேற்படி விடயங்களை உறுதிப்படுத்தினார். நாளை எதிர்ப்புப்போராட்டம் நடத்த கிராமவாசிகள் அணிதிரள்கிறார்கள். இதனால் தேவையற்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

எனவே தாங்கள் இவ்விடயத்தில் தலையீடு செய்து பிரச்சனையை தீர்க்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

தங்கள் சேவையில்,

மருத்துவர் ப.சத்தியலிங்கம் M.D
பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கை

மருத்துவர் ப.சத்தியலிங்கம் MD
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி மாவட்டம்

பிரதி :- அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், வவுனியா

தாயகம் - பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம்,
இல:63, காளி கோவில் வீதி, குருமன்காடு,
வவுனியா, இலங்கை.
024-2228391 071-0732726

Thayakam – Office of the Member of Parliament,
No:63, Kaali Kovil Road, Kurumankadu,
Vavuniya, Sri Lanka.
pathmanathans@parliament.lk

# காட்டு யானை திடீரென வழி மறித்துத் தாக்கியதில் வீதியை விட்டு விலகிக் காட்டுக்குள் பாய்ந்த பஸ்!






(உடப்பு க.மகாதேவன்)

அநுராதபுர ஹோரத் ஹல்மில்லவ பகுதியில், நேற்றுக் காலை காட்டு யானையொன்று திடீரென வழி மறித்துத் தாகியதில் பஸ் வீதியை விட்டு விலகி காட்டுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

தெய்வாதீனமாக பஸ்ஸில் பயணித்தவர்களுக்கு பெரிதும் காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகிறது.



# கொழும்பைச் சேர்ந்தவர் தம்பலகாமத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று கைது

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோயிலடி பகுதியில் வைத்து ஐஸ் போதை பொருளுடன் ஒருவரைத் தாங்கள் நேற்று மாலை கைது செய்துள்ளனர் எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 30கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் கொழும்பு 12,குணசிங்கபுரவை சேர்ந்தவர் என்றும் 63 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா – தம்பலகாமம் பிரதான பாதையில் பாதை தடை கடமையில் ஈடுபட்டிருந்த போதே இந்த நபரை பரிசோதனை செய்ததன் பின் இவ்வாறு ஐஸ் போதைப் பொருளுடன் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். மேலதிக விசாரனைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். கந்தளாய் நீதிவான் முன்னிலையில் இன்று அவர் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனவும் தம்பலகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டரங்கா? எதிர்ப்புத் தெரிவிக்கின்றது யாழ். மாநகர சபை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாநகர சபையின் அனுமதிகள் இன்றி உள்ளக விளையாட்டு மைதானம் அமைக்கக் கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இந்த ஆண்டிற்கான இறுதி மாதாந்த அமர்வு நேற்றைய தினம் மாநகர முதல்வர் வி.மதிவதனி தலைமையில் இடம்பெற்றது. இதன்போது இதர்கான பிரேரணையை பிரதி முதல்வர் இ.தயாளன் முன்மொழிந்தார்.

அப்போது அவர் குறிப்பிட்டவை வருமாறு:-

பழைய பூங்காவின் எஞ்சிய நிலத்தையும் அழிப்பதற்காக அவசர அவசரமாக ஓர் வெளிப்படுத்தல் உறுதி 2025-06-30 ஆம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு மூலம் செய்யப்பட்டது.

1622 இலக்கமுடைய அந்த உறுதியில் ஒரு நம்பிக்கை சபையின் பெயரில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டது.

இந்தல் வெளிப்படுத்தல் உறுதி ஒரு நம்பிக்கைப் பொறுப்பு சபையின் பெயரில் எழுதப்பட்டு, மாவட்டச் செயலக 13018 இலக்கப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டும் உள்ளது.

இவ்வாறு நம்பிக்கை பொறுப்பு சபையின் பெயரில் எழுதிய ஆவணத்தில் இப் பூங்காவில் இனி வரும் காலத்தில் எந்தவொரு கட்டுமானத்திற்கும் இடம் வழங்குவதில்லை என்ற நிபந்தனையும் எழுதப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையில் மாவட்ட அரச அதிபர் மட்டுமன்றி மாவட்டத்தில் பணியாற்றும் 10 அதிகாரிகள் பதவி வழியில் அங்கம் வகிக்கின்றனர்.

உள்ளக விளையாட்டு அரங்கை நிறுவுவதற்கான முடிவை எடுக்கும் நோக்குடன் 2025-09-25 கூட்டப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் கலந்துரையாடலில் அதில் அங்கம் வகிப்போரில் வெறுமனே நான்குபேர் மட்டுமே பங்குகொண்டனர். எஞ்சியோருக்கு அப்போது அந்த தகவல் தெரியாது.

கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப் பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத் தரிப்பிடத்திற்கு என்ற பெயரில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிலம் ஆகிய 3 இடங்களையும் உள்ளடக்கியே இந்த உள்ளக விளையாட்டு அரங்கு அமைக்க இன்று முற்படுகின்றனர்.

இவற்றிற்கான மொத்த நிலம் 12 பரப்பைக் கொண்டதாகக் காணப்பட்டாலும் இந்த விளையாட்டரங்கின் பணிகள் முற்றுப்பெறும் சமயம் அங்கே வருபவர்களிற்கான வாகன வசதி உள்பட ஏனையவற்றுடன் பழைய பூங்காவின் சரித்திரமும் முற்றுப்பெறும்.

யாழ்ப்பாணம் நீதிமன்றில் இந்த விடயம் தொடர்பில் இடம்பெறும் வழக்கு நடவடிக்கைகளிற்கு எந்தவிதமான பாதிப்போ அல்லது இடையூறோ இன்றி இந்தப் பிரேதணையை முன் வைக்கின்றேன்.

இந்தப் பழைய பூங்காவானது யாழ்ப்பாணத்தின் முதலாவது அரச அதிபராக 1829 முதல் 1833 ஆம் ஆண்டுவரை பணியாற்றியவரால் தனது தனிச் சொத்திலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம. ஆண்டு வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுமையான ஆளுகையில் இப் பகுதியிருந்தபோது முழுமையாக பாதுகாக்கப்பட்டதோடு அங்கே பதுங்கு குழிகள் மட்டும் அமைக்கப்பட்டன. அந்த பதுங்கு குழியில் ஒன்றும் தற்போது விளையாட்டரங்கு அமைக்க முற்படும் பகுதிக்குள் உள்வாங்கப்படுகின்றது.

இந்தனை வரலாறும், இயற்கைப் பின்னணியும் கொண்ட பகுதியில் முறையான அனுமதிகள், முறையான சொத்து நிருபணங்கள் இன்றி, திட்டமிடப்படாத நகர அபிவிருத்தி நடவடிக்கையாக இந்த உள்ளக அரங்கு அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

இவற்றைக் கருத்தில்கொண்டு பழைய பூங்காவில் அமைக்க திட்டமிடப்படும் உள்ளக அரங்கை பழைய பூங்காவில் அமைக்காது யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே நகரின் மத்தியிலேயே காணப்படும் சிங்கள மகா வித்தியாலய காணியே பொருத்தமான பகுதியாக முன்மொழிந்து பிரேரணையை முன் வைக்கிறேன். - என்றார்.

நீதிமன்றில் உள்ள விடயத்தை ஒட்டித் தீர்மானம் நிறைவேற்றுவதில் நாம் பங்குகொள்ளவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் கபிலன் தெரிவிக்க அக்கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறினர்.

வாதப் பிரதி வாதங்களின்போது ஆதரவாக உறுப்பினர்கள் நிசாந்தன், தர்ஷானந், அப்துல்லா, உதயசிறி மற்றும் திருமதி.யோகேஸ்வரி போன்றோர் கருத்துத் தெவிக்க உறுப்பினர் நிசாந்தன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



# மேல் மாகாணத்தில் ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 1,500 பட்டதாரிகள் இன்னும் காத்திருப்பு

## விசனம் தெரிவிக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 1,500 பட்டதாரிகள் மேல் மாகாணத்தில் காணப்படுகின்றனர். ஆனால் அரசாங்கம் இன்னும் இவர்களுக்கான நியமனங்கள் எதனையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டு அது தொடர்பில் விசனம் தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா.

மேல் மாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளால் நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 1500 பட்டதாரிகள் காணப்படுகின்றனர். மேல் மாகாண ஆசிரியர் வெற்றிடங்களுக்கு இத்தரப்பினரை ஆள்சேர்ப்புச் செய்து கொள்ள முடியுமாக இருக்கத்தக்க, அரசாங்கம் இவர்கள் விடயத்தில் பெரும் அநீதியைச் செய்து வருகிறது. போதுமான தொழில் வெற்றிடங்களும் காணப்படுகின்றன. உண்மையில் இவர்களின் நியமனம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியாகும் காலம் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியோடு முடிவுக்கு வருகின்றது. வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியாகும் காலம் டிசம்பர் 31 ஆம் திகதியோடு முடிவடைந்துவிடும். ஆகையால், இந்த வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகும் காலத்தை நீடித்து, இத்தரப்பினரை உடனடியாக ஆள்சேர்ப்பு செய்து கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறேன்.

தொடர்ச்சியாக இந்த அரசாங்கம் இந்த ஆள்சேர்ப்பு விடயத்தில் காலம் தாழ்த்தி வருகின்றது. பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டிய தகுதியான இடத்தை வழங்காது இழுத்தடிக்கும் வேலையைச் செய்து வருகிறது. இந்நாட்டில் 35,000 வேலையில்லாப் பட்டதாரிகள் காணப்படுகின்றனர். ஜனாதிபதி கூறியது போல், ஆசிரியர் போட்டிப் பரீட்சையிலும் இவர்கள் சித்தியடைந்துள்ளனர். பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை வழங்க அரசாங்கம் தயக்கம் காட்டி வருகிறது. தற்போதைய அரசாங்கம் பட்டதாரிகள் விடயத்தில் ஏன் இந்த விதமாக எதிர்க்கும் நிலைப்பாட்டில் இருந்து வருகிறது என்பதை புரிந்துகொள்ள முடியாது இருக்கின்றது.

வர்த்தமானி அறிவித்தல் ரத்தாகும் வரைத் தான் அரசாங்கம் இவ்வாறு காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறது. இந்தத் தொழில்களை வழங்கும் விடயத்தில் ஏற்படும் தாமதம் இந்த பட்டதாரிகளின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளை மீறும் செயல்களாகவும் உள்ளன. இத்தரப்பினருக்கு நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டும். அதுவரை ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டணியும் இவர்களுக்காக முன்நிற்கும். – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அங்கு மேலும் தெரிவித்தார்.







# அநுராதபுரம், பதுளையில் வைத்தியர்கள் போராட்டம்

வைத்தியசாலை வளாகத்தில் வெற்றுத் தோட்டாக்கள் மீட்கப்பட்டதை அடுத்து, தங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து கடுமையான கவலைகளை தெரிவித்து, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்றுக் காலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

மூன்று நாக்களுக்கு முன்பு நடந்த இந்த சம்பவம் வைத்தியசாலையில் பாதுகாப்பு குறித்த அச்சத்தை அதிகரித்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், போதுமான பாதுகாப்பு வழங்கப்படும் வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த வேலைநிறுத்தம் சிகிச்சை பெற மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளுக்கு குறிப்பிடத்தக்க சிரமத்தை ஏற்படுத்தியது. போராட்டத்தின் விளைவாக வழக்கமான சேவைகள் பாதிக்கப்பட்டன.

இதற்கிடையில், பதுளை போதனா மருத்துவமனையில் வைத்தியர் ஒருவர் ஓட்டோச் சாரதியால் தாக்கப்பட்டார் எனக் கூறப்படும் மற்றொரு சம்பவம் பதிவாகியுள்ளது.

ஓட்டோச் சாரதி வைத்தியரின் வாகனத்தின் பின்னால் நிறுத்தியதை அடுத்து இந்த சம்பவம் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வைத்தியர் வாகனத்தை நகர்த்துமாறு ஓட்டுநரிடம் கோரியபோது, வாக்குவாதம் ஏற்பட்டு, வைத்தியர் தாக்கப்பட்டார். காயமடைந்த வைத்தியர் சிகிச்சைக்காக பதுளை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, பணியிட பாதுகாப்பு குறித்த அதிகரித்து வரும் கவலைகளைக் காரணம் காட்டி, பதுளை மருத்துவமனையின் வைத்தியர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.





# கிண்ணியா விவசாயிகள் நிவாரணம் வழங்கக் கோரி நேற்று கவனவீர்ப்பு

(எச்.எம்.ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, மஜித் நகர் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த, விவசாயிகள், மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தமக்கு மானியப் பசளை, வெள்ள நிவாரண உதவிகள் வழங்கக் கோரி நேற்றுக் காலை கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மஜீத் நகர் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள,கல்லறப்பு, சுண்டிகுளம், இரட்டைக்குளம், வாழைமடு, சுண்டியாறு, வானாறு முதலான பகுதிகளில் செய்கைப் பண்ணப்பட்ட வேளாண்மைகளுக்கு நஷ்டயீடு மற்றும் மானியப் பசளை, நிவாரண உதவிகள் வழங்குமாறு கோரியே இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் “விவசாயமே எங்கள் வாழ்வாதாரம்!“, “ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே!“, “வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு ஏன் இந்தப் பாகுபாடு?” – முதலான வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், கிண்ணியா பிரதேச செயலாளரைச் சந்தித்து தமக்கு மானியப்பசளை, நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அதிகாரிகள் பார்வையிடவில்லை என்றும், அதற்கான நஷ்ட ஈடுகள் பதியப்படவில்லை என்றும் கூறினர்.

பின்னர் கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச்.எம் கனி கூறும் போது –

நீங்கள் உரிய கிராமசேவை அதிகாரியிடமும், விவசாய அதிகாரிகளிடமும் பதிவு செய்யுங்கள்.

மேலும் நீங்கள் வேளாண்மை செய்யும் விவசாய நிலத்துக்கான மாட்டுத்தளப் பிரச்சினை நிலவுகிறது. இது வரைக்கும் நீதிமன்றத் தீர்ப்பு முடியவில்லை. அந்தத் தீர்வுக்குப் பிறகுதான் இது சம்பந்தமாக தீர்மானம் எடுக்க முடியும் . – என பிரதேச செயலாளர் கூறினர்.

இதனை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கியிருந்து கலைந்து சென்றனர்.








# மண்டைதீவுப் புதைகுழி வழக்கு மீள மார்ச் 31ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

மண்டைதீவு புதைகுழி வழக்கின் அறிக்கையை மீண்டும் நேற்று அச்சுப் பிரதியாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சமர்ப்பித்த நிலையில் வழக்கு 2026 ஆம் வருடம் பங்குனி மாதம் 31ஆம் நாளன்றுக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றால் திகதியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், அறிக்கையை தட்டச்சு வடிவில் பிரதியாக்கம் செய்து நேற்றையதினம் சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து அச்சுப் பிரதியாக்கம் செய்யப்பட்ட அறிக்கையை யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மீண்டும் நீதிமன்றில் நேற்று சமர்பித்திருந்தனர்.

இதையடுத்து அறிக்கையின் விவரங்கள், சாட்சிகள் உள்ளிட்டவற்றை பெற்றுக்கொண்ட நீதிபதி மேலதிக சாட்சிகளின் வாக்குமூலங்களை குற்றத் தடுப்பு பிரிவினர் பெறவேண்டும் என்ற கோரிக்கையாலும், அகழ்வுக்கான பணிகளை முன்னெடுக்கும் புறச்சூழல் தற்போது இல்லாததாலும், வழக்கு எதிர் வரும் 2026 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாளன்றுக்கு திகதியிடப்பட்டது.





# கிளிநொச்சி மாசாரில் கவனவீர்ப்பு

கிளிநொச்சி – பச்சிலைப்பள்ளி மாசார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் பாடசாலையில் ஊழல் செய்து வருகின்றார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் அமைதி வழியில் கவனவீர்ப்பு ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை அதிபரின் முறையற்ற செயற்பாடுகள், பாடசாலை சமூகத்தைப் புறக்கணித்து தன்னிச்சையாக முடிவெடுத்தல் மற்றும் பாடசாலை கணக்கறிக்கைகளின் முறைகேடு, பாடசாலைக்கு மக்கள் செய்யும் நன்கொடைகளில் ஊழல், சொந்தஞ பகைமையை பயன்படுத்தி பாடசாலை மாணவர்களஞ புறக்கணித்தல் போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி இந்த அமைதி வழி கவனவீர்ப்பு இடம்பெற்றது.

இதன்போது கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் அதிபருக்கு எதிரான பதாதைகளை ஏந்தி மிகவும் அமைதி வழியில் செயற்பட்டனர். இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இதற்கான முடிவு கிடைக்கவில்லை என்றால் பாடசாலையை முடக்கி ஆர்ப்பாட்டத்தைச் செய்வோம் எனவுன் பாடசாலை சமூகத்தால் கூறப்பட்டுள்ளது.

இந்த முறைகேடுகள் தொடர்பாக பளை கோட்டக்கல்வி பணிமனை மற்றும் வலயம் மாகாணக்கல்வி திணைக்களம் போன்றவற்றிற்கு முறைப்பாட்டுக் கடிதங்களை வழங்கியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், பச்சிலைப்பள்ளி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலும் இது சம்பந்தமாக எந்த விதமான தீர்வும் கிடைக்கவில்லை எனவும் பாடசாலை சமூகத்தினர் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

இந்த செயற்பாடுகளில் தற்போது ஆளும் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரமுகர்களுக்கும் தொடர்பு உள்ளது எனவும், அதனை உடனடியாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு உடனடி தீர்வு எடுக்க வேண்டும் என பாடசாலை சமூகத்தால் கூறப்பட்டுள்ளது.

கவனவீர்ப்பில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# காலாவதியான 71 சட்டங்களை ரத்து செய்யும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

வழக்கற்றுப்போன மற்றும் காலாவதியான 71 சட்டங்களை ரத்து செய்ய அல்லது திருத்தக் கோரும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ரத்து மற்றும் திருத்த மசோதா 2025, மாநிலங்களவையில் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. சட்ட மூலத்தை அறிமுகப்படுத்திப் பேசிய மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால்,

“காலாவதியான சட்டங்களை நீக்குவது, சட்டமியற்றும் செயல்பாட்டின்போது ஏற்பட்ட பிழைகளை சரிசெய்வது மற்றும் சில சட்டங்களில் உள்ள பாகுபாடுகளை அகற்றுவதே இந்த சட்டமூலத்தின் நோக்கம்.

வணிகம் செய்வதை எளிதாக்குவதுடன் வாழ்வை எளிதாக்குவதற்கும் நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். சட்டங்கள் வழக்கற்றுப் போனால் அவற்றை ரத்து செய்ய அரசாங்கம் சட்டம் கொண்டு வரும்.



1925 ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் அப்போதைய சென்னை, பம்பாய், கல்கத்தா மாகாணங்களில் ஓர் இந்து, பவுத்தர், சீக்கியர், சமணர் அல்லது பார்சி இனத்தவர் உயில் எழுதினால், அது சட்டப்படி உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால், இந்த விதி முஸ்லிம்களுக்குப் பொருந்தாது. சாதி, மதம் மற்றும் பாலின பாகுபாடுகள் அரசியலமைப்பில் தடுக்கப்பட்டுள்ளன. அப்படி எனில், இது ஏன் முஸ்லிம்களுக்கு பொருந்தாது? இந்த சீர்திருத்தங்கள் காலனித்துவ மனநிலையில் இருந்து விடுதலை நோக்கிய ஒரு படி.

இந்த சட்டமூலம், இந்திய டிராம்வேஸ் சட்டம் 1886, சர்க்கரை விலை சமன்பாட்டு நிதிச் சட்டம் 1976, பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட் (ஊழியர்களின் சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்) சட்டம் 1988 உள்ளிட்ட சட்டங்களை ரத்து செய்ய முயல்கிறது.

மேலும், பொதுப் பிரிவுகள் சட்டம் 1897, பதிவு செய்யப்பட்ட பதவிகளுக்கான கலைச்சொற்களைப் புதுப்பிப்பதற்கான சிவில் நடைமுறைச் சட்டம் 1908, சில வழக்குகளில் நீதிமன்றங்களால் உயில்களுக்குச் சரிபார்ப்பு பெறும் தேவையை நீக்குவதற்கான இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 ஆகிய நான்கு சட்டங்களை திருத்த முயல்கிறது. இதுதவிர, வரைவுப் பிழையை சரி செய்வதற்காக பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005-ஐ திருத்துகிறது.

2014 முதல் 1577 பழைய காலாவதியான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன அல்லது திருத்தப்பட்டுள்ளன. இதில், 1562 சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 15 சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன” என குறிப்பிட்டார்.

இந்த சட்ட மூலம் மக்களவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்ட நிலையில், மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

# டில்லியின் காற்றின் தரம் மிகவும் மோசமான பிரிவில்

டில்லியின் காற்றின் தரக் குறியீடு நேற்று காலை 329 புள்ளிகளில் மிகவும் மோசமான பிரிவில் இருந்தது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தகவலின்படி, டெல்லி முழுவதும் உள்ள அனைத்து கண்காணிப்பு நிலையங்களிலும் காலை 7 மணி நிலவரப்படி காற்றின் தரக் குறியீடு கடுமையான வரம்பிற்குக் கீழே இருந்தது.

சில பகுதிகள் மோசமான மண்டலத்தில் பதிவாகியுள்ளன.



நேற்று முன்தினம் பலத்த காற்று மற்றும் மெல்லிய மூடுபனி மாசுபாட்டின் அளவை கடுமையான வகையிலிருந்து வெளியே தள்ள உதவியது.

இதனால் 354 ஆக இருந்த காற்றின் தரக் குறியீடு 24 மணி நேரத்தில் 329 புள்ளிகளாக குறைந்தது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தகவலின்படி, 0 முதல் 50 வரையிலான காற்றின் தரக் குறியீடு ‘நல்லது’ என்றும், 51 முதல் 100 வரை ‘திருப்திகரமானது’ என்றும், 101 முதல் 200 வரை ‘மிதமானது’ என்றும், 201 முதல் 300 வரை ‘மோசம்’ என்றும், 301 முதல் 400 வரை ‘மிகவும் மோசமானது’ என்றும், 401 முதல் 500 வரை ‘கடுமையானது’ என்றும் கருதப்படுகிறது.

கடந்த மூன்று நாள்களாக தலைநகரையே ஸ்தம்பிக்க வைத்த அடர்த்தியான புகைமூட்டம் வீதிகளை மூடியது, விமானம் மற்றும் போக்குவரத்து சேவைகளை பெருமளவில் பாதித்தது மற்றும் பல வீதி விபத்துகளுக்கு வழிவகுத்தது.

# பல பாடசாலைகளுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்

## அகமதாபாத்தில் பதற்றம்

அகமதாபாத்தில் உள்ள பல முக்கிய பாடசாலைகளுக்கு நேற்று காலை பல வெடிகுண்டு அச்சுறுத்தல்கள் வந்தன என இந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.

வேஜல்பூரின் ஜீவராஜ் பூங்கா பகுதியில் அமைந்துள்ள சைடஸ் பாடசாலை, ஜெபர் பாடசாலை, மகாராஜா அக்ரசென் பாடசாலை, வஸ்த்ரபூரில் உள்ள நிர்மான் பாடசாலை மற்றும் மகர்பாவில் உள்ள டிஏவி சர்வதேச பாடசாலைகளுக்கு மின்னஞ்சல் மூலமாக இந்த மிரட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த பாடசாலை வளாகங்களில் முழுமையான பாதுகாப்பு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் அகற்றல் படை, சிறப்பு செயல்பாட்டுக் குழு, தீயணைப்பு படை மற்றும் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மோப்ப நாய் படைகளைப் பயன்படுத்தி விரிவான சோதனைகளை மேற்கொண்டனர்.

எவ்வாறெனினும், இதுவரை



சந்தேகத்திற்கிடமான பொருட்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவித்த அதிகாரிகள், இந்த அச்சுறுத்தல்கள் போலியானவை என்றும் உறுதிபடுத்தினர்.

அதேநேரம், மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்ட மூலத்தை கண்டறிந்த அதிகாரிகள் அது குறித்து விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.




# மெக்சிக்கோ நாடாளுமன்ற விவாதத்தின் போது தலைமுடியை இழுத்து சண்டையிட்ட எம்.பிக்கள்

மெக்சிக்கோ நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றின் மீதான விவாதத்தின் போது ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல், ஒருவரையொருவர் தாக்கும் வன்முறையாக மாறியுள்ளது.

மெக்சிக்கோ அரசாங்கம் அந்நாட்டின் 'வெளிப்படைத்தன்மைக்கான அமைப்பைக் கலைப்பதற்கான புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வந்தது.

இந்த அமைப்பைக் கலைப்பதன் மூலம் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மை குறையும் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் நடுப்பகுதிக்கு வந்து கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அவர்களுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம் தள்ளுமுள்ளாக மாறியது.

உறுப்பினர்கள் ஒருவரையொருவர் தள்ளிவிட்டுக் கொண்டதுடன், ஆவேசமடைந்த சில உறுப்பினர்கள் மற்றவர்களின் முடியைப் பிடித்து இழுத்துத் தாக்கியதால் அவையில் பெரும் பதற்றம் நிலவியது.

நாடாளுமன்றத்திற்குள் நிலவிய கட்டுப்பாடற்ற சூழலைத் தொடர்ந்து, கூட்டத் தொடரைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

மக்களாட்சியின் உயரிய சபையான நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு நடந்து கொண்டது அரசியல் நாகரீகமற்ற செயல் என சர்வதேச ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

# இஸ்ரேல் - இந்தியா உறவு மேலும் வலுப்பெறும்: நெதன்யாகு சந்திப்புக்கு பின் ஜெய்சங்கர் கருத்து



இஸ்ரேலுடனான இந்தியாவின் வியூக நட்புறவு மேலும் மேலும் வலுப்பெறும் என்று அந்நாட்டுப் பிரதமர் நெதன்யாகு உடனான சந்திப்புக்குப் பிறகு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அந்நாட்டு ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக்கை சந்தித்துப் பேசினார். பின்னர், இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் கிடியான் சார், பொருளாதாரம் மற்றும் தொழில்துறை அமைச்சர் நிர் பர்காட் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை, ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

இஸ்ரேல் பிரதமருடனான தனது சந்திப்பு குறித்து சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர்,

“இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை சந்தித்தேன். பிரதமர் நரேந்திர மோடியின் அன்பான வாழ்த்துகளை அவருக்குத் தெரிவித்தேன். தொழில்நுட்பம், பொருளாதாரம், திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு, பாதுகாப்பு ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் தொடர்பான அவரது கருத்துக்களுக்கு மதிப்பளித்தேன். நமது வியூக நட்புறவு மேலும் மேலும் வலுப்பெறும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகு விரைவில் இந்தியா வர உள்ள நிலையில், ஜெய்சங்கரின் இந்தப் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

# டொனால்ட் ட்ரம்ப் உத்தரவால் எரிபொருள் சந்தையில் அதிர்வு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெனிசுவேலா எண்ணெய்க் கப்பல்கள் தொடர்பில் வெளியிட்ட உத்தரவையடுத்து, சர்வதேசத்தில் எரிபொருள் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி எரிபொருள் விலை ஒரு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

பிரெண்ட் மசகு எண்ணெய் விலை 1.5 வீதம் உயர்ந்து ஒரு பீப்பாய் 59.79 டொலராகவும், அமெரிக்க மேற்கு டெக்சாஸ் இடைநிலை மசகு எண்ணெய் 1.5 வீதத்தால் உயர்ந்து ஒரு பீப்பாய் 56.12 டொலராகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.



இந்த நடவடிக்கையால் ஒரு நாளைக்கு 0.4 முதல் 0.5 மில்லியன் பீப்பாய் எண்ணெய் விநியோகத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தலாம் என்பதால், ஒரு பீப்பாய்க்கான விலை ஒன்று அல்லது இரண்டு டொலரால் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கப்பல்களுக்கு எதிரான தடையை அமெரிக்கா எவ்வாறு நடைமுறைப்படுத்தும் என்பது தெளிவாகத் தெரியவில்லை என்பதால், வெனிசுவேலாவின் மசகு எண்ணெய் ஏற்றுமதி கடுமையாகக் குறைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2025

## மேஷம்

பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## ரிஷபம்

உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்ச்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.

## கடகம்

புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.

## சிம்மம்

இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.

## கன்னி

இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்துக்குச் செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.

## விருச்சிகம்

இன்றைய நாள் முன்னேற்றத்துக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.12.2025




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

# குவைத்துக்குத் தப்பி ஓடி பின் திரும்பி வந்த பிள்ளையானின் சகா ஒருவர் நேற்றுக் கைது

## எனினும் விசாரணையின் பின் மாலையில் விடுவிப்பு



(கனகராசா சரவணன்)

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த பிள்ளையானின் சகாவான அஜித் என்பவரை மட்டக்களப்பு கொண்டையங்கேணியில் உள்ள அவரது வீட்டில் வைத்து கொழும்பில் இருந்து சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை கைது செய்தனர். எனினும் பின்னர் நேற்று மாலையிலேயே அவர் விடுவிக்கப்பட்டார் எனத் தெரியவருகின்றது.

பிள்ளையானின் கைதை அடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர் தேடப்பட்டு வந்தார் எனவும், அச்சமயம் குவைத் நாட்டிற்கு தப்பி ஓடி தலைமறைவாகி இருந்துவிட்டு, மீண்டும் நாட்டிற்கு திரும்பி வந்து நான்கு நாள்களின் பின்னர் நேற்று அவர் கைது செய்யப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 டிசம்பர் 15 ஆம் திகதி கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தனை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலி வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையானிடம் மேற்கொண்டுவரும் விசாரணையின் அடிப்படையில் அந்த கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் பிள்ளையானின் சகாக்கள் பலர் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

பிள்ளையான் சகாவான அஜித் என அழைக்கப்படும் கிருஷ்ணபிள்ளை சுமன் என்பவரையும் தேடி வந்துள்ள நிலையில் அவர் இப்போது கைது செய்யப்பட்டார். எனினும் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.